**தேதி :** 24.10.2025 **SC.No. :** 373/2023 PW :**2** முகமது இப்ராஹிம்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 28.12.2022ம் தேதி, இரவு 08.45 மணிக்கு நான் எனது ரஹ்மத் புரோட்டா கடையில் இருக்கும்போது, மாரியப்பன் என்பவர் எனது கடையில் புரோட்டா சாப்பிட்டு கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. இரவு 08.45 மணிக்கு நல்ல வியாபாரம் நடந்தது. வெளியே சத்தம் கேட்டது. கூட்டமாக இருந்தது. ஒரு நபர் இரத்தக்காயத்துடன் ஓடுவதாக வெளியே பேசிக்கொண்டார்கள். ஆஜர் எதிரி சிவா அன்றைய தினம் கையில் கத்தியால் மாரியப்பனை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஓங்கி குத்தி விட்டார் என்றால் சரியல்ல. அன்று ஒரு நபரை மற்றொரு நபர் கத்தியால் குத்தி விட்டதாக கேள்விபட்டேன் என்றால் சரிதான். கடைக்கு வெளியே இரத்தம் கிடந்தது. அன்றைய தினம் எதிரி மாரியப்பனை கத்தியால் குத்தி விட்டு வெளியே ஓடும்போது நானும், சப்ளையராக வேலை பார்க்கும் அபுபக்கர் சித்திக், சாகுல் ஹமீது ஆகியோர்கள் மாரியப்பனை கத்தியால் குத்த விடாமல் சத்தம போட்டு பிடிக்க முயன்றபோது, எதிரி கத்தியை காட்டி எங்களைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. காயம்பட்ட மாரியப்பனை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும், சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு

**ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை</u> –**

**இல்லை.**

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.25 11:35:14 +0530

**தேதி :** 24.10.2025 **SC.No. :** 373/2023 **PW :3** சாகுல் ஹமீது

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 28.12.2022ம் தேதி, இரவு 08.45 மணிக்கு நான் ரஹ்மத் புரோட்டா கடையில் புரோட்டா மாஸ்டராக வேலை செய்தேன் என்றால் சரிதான். மாரியப்பன் என்பவர் புரோட்டா சாப்பிட்டு கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி சிவா அன்றைய தினம் கையில் கத்தியால் மாரியப்பனை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஓங்கி குத்தி விட்டார் என்றால் சரியல்ல. கடைக்கு வெளியே இரத்தம் கிடந்தது. அன்றைய தினம் எதிரி மாரியப்பனை கத்தியால் குத்தி விட்டு வெளியே ஓடும்போது நானும், முகமது இப்ராஹீம், சாகுல் ஹமீது ஆகியோர்கள் மாரியப்பனை கத்தியால் குத்த விடாமல் சத்தம போட்டு பிடிக்க முயன்றபோது, எதிரி கத்தியை காட்டி எங்களைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. காயம்பட்ட மாரியப்பனை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும், சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.25 11:35:22 +0530